**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 143/2020 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 7 |
| Name | : | முருகராஜ், வயது 43 |
| Father Name/Husband Name | : | முத்துவீரப்பன் |
| Village | : | கோவில்படடி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் உள்ளேன். சம்பவ சமயத்தில் நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது கடந்த 15.04.2019 ஆம் தேதி 15.00 மணிக்கு பொன்னையா மகன் கோபால்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று அ தன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.67/2019 பிரிவுகள் 279, 337 இதச வழக்காக பதிவு செய்தேன்
2. **(நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். வழக்கு பற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. விபத்து நடந்த அன்று அ.சா.1 உங்கள் காவல்நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்.
2. மேற்படி புகார் வாக்குமூலத்தை நீங்கள் பார்வையிட்டீர்களா என்றால் பார்வையிட்டேன். சம்பவத்தின் போது கொடுத்த புகார் வாக்குமூலத்தில் வழக்கு பதிவு செய்யாமல் மீண்டும் புதிதாக கொடுத்த புகாரின் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் விபத்து நடந்த அன்று என்னிடம் புகார் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை 15.04.2019 அன்று தான் புகார் கொடுத்தார்.

3. விபத்து அன்று கொடுத்த புகார் வாக்குமூலம் என்ன ஆனது என்பது குறித்து 15.04.2019 ஆம் தேதி கொடுக்கப்பட்ட புகாரின் போது அ.சா.1 இடம் விசாரித்தீர்களாஎ ன்றால் விசாரிக்கவில்லை.
4. விபத்து சம்பவத்தினை யார் யார் பார்த்தார்கள் என்றும் அவர்களது முகவரிகள் எதுவும் அ.சா.1 புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.
5. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 உங்கள் காவல்நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக சொல்வதும் விபத்து நடந்த அன்று அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்ட புகார் இவ்வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் அதனை வழக்கில் இருந்து மறைத்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.
6. அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை 6 நாட்கள் காலதாமதமாக தான் நீதிமன்றம் வரப்பெற்றுள்ளது என்றாலும் மேற்படி காலதாமதத்திற்கான காரணமும் உங்களுக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. நீங்கள் உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.